

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை, எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி.வெ.ஷோபனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.4.2025) தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் (Tamil Nadu State Food Commission) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள என்.சுரேஷ்ராஜன், உறுப்பினர்கள் திருமதி கே.எம். மதுபாலா, எம்.கணேசன், கே.கருணாநிதி, எஸ். பெரியாண்டவர், டி.சீனிவாசன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு ஆகியோர் உள்ளனர்.



கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கழக முன்னாள் அமைப்புச் செயலாளரும், முன்னாள் தென்னாற்காடு மாவட்டக் கழகச் செயலாளரும், விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.செல்வராஜ் அவர்களின் தம்பி மகனும் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான எம்.எஸ்.கணேஷ் குமார் 14.04.2025 அன்று தனது பிறந்தநாளை முன்னிட்டு குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## அண்ணல் அம்பேத்கர் எந்த இலட்சியத்திற்காக உழைத்தாரோ,

# அந்த இலட்சியத்தை அடைய, நாம் ஓரணியில் நின்று உறுதியோடு பயணிப்போம்!

### சென்னையில் நடைபெற்ற ‘சமத்துவ நாள்’ விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை, ஏப்.16 –**

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் `சமத்துவ நாள்’ விழா நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிகு உரை யாற்றினார்.**

அப்போது அவர், “அண்ணல் அம்பேத்கரின் வழியில் அயராது உழைப்போம். எல்லா நாளையும் சமத்துவ நாளாகப் போற்றுவோம், புரட்சியாளர் அம்பேத்கரின் லட்சியங்களை வென்றெடுப்போம்” என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிகு உரை வருமாறு:-

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் உரிமைகளை நியமனப் பதவிகளில் வருகின்ற ஆளுநர்கள், இனி எந்நாளும் பறிக்க முடியாது என்ற மகத்தான தீர்ப்பை இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களுக்கும் பெற்றுத் தந்த நம் `மாநில சுயாட்சியின் நாயகர்’ முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சமத்துவ நாள்!**

அண்ணல் அம்பேத்கரின் குடும்ப வாரிசாக மட்டுமின்றி, அவரின் கொள்கை வாரிசாகவும் திகழ்கின்ற பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதை மிகுந்த மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் கருதுகிறேன். தந்தை பெரியாரின் பிறந்த நாளை சமூகநீதி நாள் என்றும், அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவ நாள் என்றும் இந்தியாவிலேயே கொண்டாடுகின்ற ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு மட்டும்தான். தலைவர்களைக் கொண்டாடுகின்ற அதேவேளையில், அவர் களின் கொள்கைகளை அடுத்தடுத்த தலைமுறைக்கும் நாம் கொண்டு சேர்க்க வேண்டும். அதை மனதில் வைத்துத்தான் நம் முதலமைச்சர் அவர்கள், அயராது உழைத்து வருகிறார், பல திட்டங்களைத் தீட்டி வருகிறார்.



**விடுதிக் கட்டட திறப்பு விழா!**

ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து அப்போதைய சென்னை மாகாண சட்டமன்றத்திற்குள் சென்ற முதல் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.ராஜா அவர்கள். ஒடுக்கப்பட்ட மக்களை ஆதிதிராவிடர் என்று அழைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய வரும் அவர்தான். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த எம்.சி.ராஜா அவர்களின் பெயரில் இன்று நவீன கல்லூரி மாணவர் விடுதிக் கட்டட திறப்பு விழா நடந்து இருக்கிறது.

சுமார் 228 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிகள், கல்லூரி விடுதிகள், சமூக நலக் கூடங்கள் கட்டடங்களை நம் முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்திருக்கிறார். பழங்குடியினர் ஆயிரம் பேருக்குக் குடியிருப்புகளையும் நம் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார். அது மட்டுமல்ல, பட்டியல் பழங்குடிச் சமூகப் பயனாளிகள் 50,000 பேருக்கு 301 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை, முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களைக் கைதூக்கிவிட வேண்டும். இதுதான் நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் ஒரே இலட்சியம். இன்றைக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது 9.69 சதவிகிதமாக இந்தியாவிலேயே முதலிடத்திற்கு வந்துள்ளது.

‘எல்லோருக்கும் எல்லாம்’ என எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்கின்ற கழக அரசின் திட்டங்கள்தான் இந்த வளர்ச்சிக்கு ஒரே காரணம். ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களைக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னேற்ற வேண்டும். சமூக அடக்குமுறைகளில் இருந்து, அவர்களை நாம் காப்பாற்ற வேண்டும். வன்கொடுமைகளை தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கான, உறுதியான நடவடிக்கைகளை நம் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

**இதற்கு பெயர்தான் சமூகநீதி!**

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தங்கை அரியலூர் அனிதா நீட் தேர்வினால் 2017 ஆம் ஆண்டு உயிரிழந்தது நம் அனைவருக்கும் தெரியும். நீட் ஒழிப்பே அனிதாவின் மரணத்திற்கான நீதி. எனவேதான், நீட்டிற்கு எதிரான சட்டப்போராட்டத்தை நம் அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. அன்றைக்கு மருத்துவக் கல்லூரிக்குள் நுழைய தங்கை அனிதாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அனிதா பிறந்த அதே அரியலூரில் மருத்துவக் கல்லூரி அரங்கத்திற்கு அனிதாவின் பெயரைச் சூட்டி அழகு பார்த்தது நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள். இதற்கு பெயர் தான் சமூகநீதி.

இந்த உணர்வு நம் உள்ளங்களில் இருக்கின்ற வரை தமிழ்நாட்டை யாராலும் பிரித்தாள முடியாது. ஆனால், நம்மைப் பிரித்தாளுகின்ற முயற்சிகள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடந்து கொண்டு இருக்கின்றன. அந்த சூழ்ச்சிகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும், முறியடிக்க வேண்டும். அதற்கு தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பார்வை நம் அனைவருக்கும் வேண்டும். அதற்காகத்தான் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை இன்றைக்கு சமத்துவ நாளாக கொண்டாடுகின்றோம்.

**பொருளாதார விடுதலை!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அண்ணல் அம்பேத்கரின் பெயரைச் சூட்டி அழகு பார்த்தார். அம்பேத்கருக்கு சென்னையில் மணிமண்டபம் கட்டியதும் நம் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு கலைஞர் வழியில் அம்பேத்கரின் இலட்சியங்களை உயர்த்திப் பிடித்துக்கொண்டு இருப்பவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். பட்டியல், பழங்குடி மக்கள் சமூக ரீதியாக விடுதலை பெற வேண்டும். அதுமட்டுமல்ல, பொருளாதார விடுதலையையும் அவர்கள் அடைய வேண்டும். அதற்காகத்தான் ‘அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’ போன்ற திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

பட்டியல், பழங்குடி மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது நம் அரசு. அதற்கு ஒரு சிறந்த உதாரணம் தான் இன்றைக்கு நடந்து இருக்கின்ற இந்த நிகழ்ச்சி. ஆகவே, அண்ணல் அம்பேத்கர் எந்த இலட்சியத்திற்காக உழைத்தார்களோ, அந்த இலட்சியத்தை அடைவதற்கு நாம் அனைவரும் ஓரணியில் நின்று உறுதியோடு பயணிப்போம்.

நலத்திட்டங்களை பெற வந்துள்ள அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணல் அம்பேத்கர் புகழ் ஓங்கட்டும். இன்று மட்டுமல்ல, எல்லா நாளும் சமத்துவ நாளாக அமையட்டும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.